கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.14/2016**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 17.06.2026 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 17.06.2026 | சாட்சி | பி.வா.சா.2 |
| பெயர் | தியாகராஜன் | வயது | 70 |
| தந்தை பெயர் | ராமசாமி | கிராமம் | சி.முட்லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் விவசாயம் செய்கிறேன். 1ம் பிரதிவாதியான சுலோச்சனாவின் கணவர் அவரை பிரிந்து விட்டார் என்றாலும் அவருக்கு குழந்தைகள் இல்லை என்றாலும் சரிதான். சுலோச்சனாவிற்கு மணவெளி தெருவில் 5 செண்ட் ஏற்கனவே இருந்தது என்றால் சரிதான். அந்த 5 சென்டில் 2 1/2 யை சென்ட்யை தேவராசு என்பவர் கிரயம் வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். தேவராசு இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்திற்கு வடக்கே கிருஷ்ணமூர்த்தி என்பவர் மனையும் வீடும் வைத்திருக்கிறார் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி தற்போது உயிருடன் இல்லை. அவருடைய மகனான நந்தகுமார் இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு சுலோச்சனாவிற்கு மாதவபடையாட்சி இயற்றிய உயில் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கு சம்மந்தமாக கிரயம் ஏற்பட்டதாக கூறிய நிலையில் யார் அணுகி கிரயம் ஏற்பட்டது என்றால் சச்சிதாநந்தம் மற்றும் ரமேஷ். எவ்வளவு நாட்களுக்கு முன்பு கிரயம் வாங்கி அணுகினார்கள் என்றால் கிரய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட 2-3 நாட்களுக்கு முன்பு. சுலோச்சனா என்னிடம் நேரடியாக அணுகவில்லை என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.8ல் 3ம் பக்கத்தில் சுலோச்சனா

புகைப்படத்திற்கு பக்கத்தில் இருக்கும் கையொப்பம் அவருடையது தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 ல் 3ம் பக்கத்தில் மணிவண்ணன் புகைப்படத்திற்கு கீழ் இருக்கும் புகைப்படமானது யாருடையது என்றால் உஷாராணி. உஷாராணி என்பவர் மணிவண்ணனின் தாயார் என்றால் சரிதான். உஷாராணி மற்றும் மணிவண்ணன் ஆகியோர் எனக்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ல் உஷாராணி புகைப்படத்திற்கு பக்கத்தில் சுலோச்சனா என்று கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. சுலோச்சனாவிற்கு உஷாராணிக்கு இடையே பேச்சுவார்த்தை கிடையாது என்றாலும் அவர்களுக்கு சொத்து சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றாலும் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆனது மோசடியாக தயாரிக்கப்பட்டது என்பதற்காக சுலோச்சனா உஷாராணி மீது குற்றநடவடிக்கை எடுத்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் வழக்கைப்பற்றி மட்டும் ஊர்மக்கள் மூலம் அறிந்து கொண்டேன். மற்ற விவரங்கள் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 ல் உள்ள சங்கதிகள் சரியானவை தான். அதில் ஏ.சுலோச்சனா என்று கையெழுத்து இருக்கமாக உள்ளது என்றால் சரிதான். சாட்சி பின்னர் இடைவெளி இருப்பதாக கூறினார். அதில் சுலோச்சனாவின் கையொப்பம் ஆனது கோணலும் மாணலாக உள்ளதா என்றால் சரிதான்.

5. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 ல் சுலோச்சனாவின் கையொப்பம் தெளிவாக இடைவெளி விட்டு காணப்படுகிறது என்றால் சரிதான். சுலோச்சனா சொத்தை கிரயம் கொடுக்க வேண்டும் என்று எழுதி கொடுத்த ஆவணம் இல்லை என்றாலும் நானும், ரமேஷ் மற்றும் சச்சிதாநந்தம் ஆகியோர் மோசடியாக தயாரித்தது என்றால் சரியல்ல. சாட்சி தாமாக முன்வந்து சுலோச்சனா கூறியதன் பேரில் சச்சிதாநந்தம் மற்றும் ரமேஷ் அணுகினார்கள் என்று கூறினார். பி.வா.சா.ஆ.3 ஆனது சிதம்பரத்தில் வாங்கியது என்றால் சரிதான். ஆவணம் எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்றால் பரங்கிப்பேட்டை. அதில் தட்டச்சர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சிதம்பரத்தில் வாங்கிய பத்திரத்தை என்ன காரணத்திற்காக பரங்கிப்பேட்டையில் தட்டச்சு செய்ய கொடுத்தேன் என்றால் பதிவு அலுவலகம் அங்கு இருப்பதனால் அங்கு கொடுத்தேன்.

6. பரங்கிப்பேட்டை பதிவு அலுவலத்திற்கு பக்கத்திலேயே தட்டச்சர், ஆவண எழுத்தர் இருக்கிறார்கள் என்றால் சரிதான். உடன்படிக்கை எழுதப்பட்ட

தேதியிலேயே சொத்தை கிரயம் வாங்குவதற்கான பணம் என்னிடம் இருந்தது என்றால் சரிதான். ஏன் அந்த சமயமே கிரயம் வாங்கவில்லை என்றால் அப்பொழுது ரூ.75000/- தான் இருந்தது போக மீதி தொகையை கிரயம் கொடுக்கும் சமயத்தில் பைசல் செய்து கொள்ளலாம் என்று இருந்தேன்.

7. நான் உண்மையிலேயே கிரயம் வாங்க கொள்ளவேண்டும் என்று எண்ணிருந்தால் நேரடியாகவே சுலோச்சனாவிடம் இருந்து கிரயம் வாங்கிருப்பேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக மோசடியாக கிரய உடன்படிக்கை ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(Sd/- E.Swetha)
Additional District Munsif
Chidambaram